# விபஸ்ஸனா
## செய்தி மடல்

(விபஸ்ஸனா : ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர் - 7, இதழ் - 4, பிப்ரவரி-2014,
தமிழ் மாதப் பத்திரிக்கை

ஒரு மடலின் விலை - ரூ 2.50
ஆண்டு சந்தா - ரூ 30

விபஸ்ஸனா தியான மையம்
தம்ம சேது, சென்னை,
தமிழ்நாடு


# திரு. சத்திய நாராயண கோயங்கா: அக-அமைதியின் தூதுவர் (பாகம் 4)

*[குருஜி திரு. சத்ய நாராயண கோயங்கா அவர்களின் ஒரு சிறிய வாழ்க்கைத் தொகுப்பு.]*



**தம்மகிரியில் அடிக்கல் நாட்டும் விழா**



**தம்மகிரி**

## தம்ம குன்று

தொடக்க காலத்தில், ஆசிரமங்கள், புத்த விஹாரங்கள், தேவாலயங்கள், பள்ளிக் கூடங்கள், யாத்திரீகர் தங்குமிடங்கள், விடுதிகள், நல ஆக்க நிலையங்கள் போன்ற மலிவு வாடகையில் கிடைக்கக்கூடிய தாற்காலிகமான இடங்களிலேயே முகாம்கள் நடைபெற்றன. ஒவ்வொரு இடத்திலும் முகாம் நடத்த ஓரளவு வசதிகள் இருந்தாலும், பல குறைபாடுகளும் இருந்தன. அதோடு, முகாம் ஆரம்பத்தில் இடத்தை தயார்படுத்தவும், முகாம் முடிந்தவுடன் அனைத்தையும் அகற்றவும் வேண்டிய வேலைகளும் இருந்தன. எனவே, ஆண்டு முழுவதும் முகாம்கள் நடத்த வசதியாக விபஸ்ஸனா தியானத்திற்கென தனித்த ஒரு இடத்தை அமைக்க தேடுதல் தொடங்கியது.

அதனால்தான், 1973ம் ஆண்டில் ஒரு நாள், தியோலாலி என்ற ஊரில் முகாமை நிறைவு செய்துவிட்டு மும்பையில் இருக்கும் தன் இல்லத்திற்கு திரும்பி வந்துகொண்டிருந்த கோயங்காஜி அவர்களது வாகனத்தை இகத்புரி என்னும் ஊரில் ஒரு கடைக்காரரும், ஒரு இளம் நகராட்சி ஊழியரும் வழிமறித்து நிறுத்தினர். அவர்கள் அந்த ஊரின் புறநகர் பகுதியில் சில நிலங்களைப் பார்த்து வைத்திருந்தனர். அந்த இடங்கள் மையம் அமைக்க தகுந்தவையா என்று பார்த்துச் சொல்லுமாறு கோயங்காஜியை வேண்டினர். சில நாட்களுக்கு முன்னால் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு அவர் காலுக்கு கட்டு போட்டிருந்ததால் அவர் சீக்கிரம் தம் வீடு சென்று சேர விரும்பினார். எனவே, அவர் தயக்கத்துடனேயே இடங்களைப் பார்க்க சம்மதித்தார்.

முதல் இரண்டு இடங்கள் சற்றும் தகுந்தவையாக இல்லை. இன்னமும் பார்க்க ஒரு நிலம் மீதம் இருந்தது. வாகனம் நீண்ட நாட்களாக எவரும் பயன்படுத்தியிராத குண்டும்குழியுமான ஒரு பாதையில் சென்றது. அது பெரும் மாமரங்கள் சூழ்ந்த பிரிட்டிஷார் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் கொண்ட ஒரு குன்றின் உச்சிக்கு இட்டுச் சென்றது. அவற்றுள் சில பாழடைந்து கிடந்தன. ஒரு பங்களாவின் உள்ளே

ஆடுகள் சென்று வந்தன. அவற்றின் பின்புறத்தில் வறண்ட மலை ஒன்று நெடிதுயர்ந்திருந்தது..

கோயங்காஜி சில கணங்கள் தமது கண்களை மூடிக் கொண்டார். பின்னர், "ஆம், இது உகந்த இடம்தான்," என்றார். உடனேயே, அவருடன் பயணித்த ஒரு வணிகர் அந்த இடத்தை தாமே வாங்கி கொடையாக அளிக்க முன்வந்தார். 'தம்ம குன்று' என்று அழைக்கப்படும் தம்ம கிரி மையம் இவ்வாறுதான் தொடங்கப்பட்டது. தொடக்க காலத்தில் மையம் சிறிய அளவில் செயல்பட்டது. சிறிய எண்ணிக்கையிலேயே தியானிகள், பெரும்பாலும் மேலை நாட்டினர், தங்கியிருந்தனர். தங்கள் நேரத்தை எவ்வாறு கழிப்பது என்று வினவி அவர்கள் கோயங்காஜிக்கு கடிதம் எழுதினர். "தியானம் செய்யுங்கள், தியானம் செய்யுங்கள், தியானம் செய்யுங்கள். உங்களை நீங்களே தூய்மைப்படுத்திக்கொள்வதுடன் தியான மையத்தையும் தூய்மையாக்குங்கள்," என்று அவர் பதில் அளித்தார். முதலில் அவர்கள் கிணற்று நீரும், தூரிகைகளும் கொண்டு இடத்தை சுத்தப்படுத்தினர். இடம் தூய்மையானவுடன், தினசரி ஆறு முதல் எட்டு மணி நேரம் வரை தியான அமர்விற்கு அர்ப்பணித்தனர். விரைவிலேயே, மேலும் பலர் அங்கு வந்து சேர்ந்தனர்; கட்டுமானப் பணிகள் தொடங்கின. 1976இம் ஆண்டு அக்டோபர் மாதம் முறைப்படி தம்ம கிரி திறந்து வைக்கப்பட்டது.

அது ஒரு கிளர்ச்சியூட்டிய நிகழ்வு; கடினமானதும் கூட. வழக்கமாக நடப்பதைப் போல், அங்கும் செலவுகள் முன்மதீப்பீட்டை கடந்திருந்தன. அறக்கட்டளையினரால் தர வேண்டிய பணத்தை ஒப்பந்தக்காரர்களுக்கு தர இயலவில்லை. எடுத்துக்காட்டாக, புதிய ஆசிரியர் தங்குமிடத்திற்கான செலவுகளை சரிக்கட்ட போதுமான நிதி வசதி இல்லை. கோயங்காஜி அதைப் பற்றி அறிந்தபொழுது, அங்கே தங்க மறுத்துவிட்டார். மாறாக, அவரும் அவரது மனைவியார் மாதாஜி அவர்களும் குழாய் அமைப்புப் பணி கூட செய்யப்படாத நிலையில் இருந்த மாணவர்கள் தங்கும் பொது அறைக்கு குடிபெயர்ந்துவிட்டனர். அவர்களும் மற்ற அனைவரையும் போன்று பொது கழிப்பிடங்களையே பயன்படுத்தினர். அறக்கட்டளையினர் ஒப்பந்ததாரர்களுக்கு தர வேண்டிய பணத்தை தரும் வரை அதாவது, தம்ம கிரி செயல்பட ஆரம்பித்து முதல் ஆறு மாதங்களுக்கு, அவர்கள் இவ்வாறுதான் வாழ்ந்தனர்.

காலப்போக்கில், நிதி வசதிகள் பெருகின; நிறைய கட்டிடங்கள் முளைத்தன; பின், யாங்கோன் நகரில் ஊ பா கின் அவர்களின் மையத்தில் உள்ளதைப் போன்றதொரு தியானக் ஸ்தூபி (பகோடா) கட்ட பணிகள் தொடங்கின. இந்திய தொழிலாளர்களுடன் சேர்ந்து மேலை நாட்டு தன்னார்வலர்களின் குழு ஒன்றும் பணியாற்றியது. ஸ்தூபியின் அலங்காரப் பூச்சு



வேலைகளில் உதவ போத்கயா பர்மீய விஹாரத்தின் உள்வாழ் துறவி ஒருவர் வந்தார். 1979ம் ஆண்டின் முன்பகுதியில் தியானக் பகோடா முறையாக திறந்துவைக்கப்பட்டது. ஊ பா கின் அவர்களது மையத்தில் மாணவர்களுக்கு உதவியளித்து வந்த ஸயாமா டா ம்யா த்வின் அவர்களும், அவரது கணவரும் ஊ பா கின் அவர்களுடன் அரசாங்கத்தில் பணியாற்றியவருமான ஊ சிட் டின் அவர்களும் திறப்பு விழாவிற்கு வந்திருந்தனர்.

இன்னும் சில காலமே கழித்து மற்றுமொரு மடைமாற்றும் நிகழ்வும் நடந்தது. தனது பயிற்சி முகாமை முதன்முறையாக மேலை நாடுகளில் நடத்துவதற்காக கோயங்காஜி அவர்கள் பயணித்தார். பத்து ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு முறை அவருக்கு அழைப்பு விடுத்திருந்த பெண்மணி ஒருவர், அவர் சொன்னதை நினைவில் வைத்திருந்தார். இம்முறை பிரெஞ்சு யோக ஆசிரியர்களின் கூட்டமைப்பின் சார்பாக மீண்டும் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

**பாரதத்தில் தொடங்கியது பாரெங்கிலும் பரவியது:**

"மியான்மாரிலிருந்து தம்மம் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்லும்," என்று பழங்காலத்திலிருந்து வழங்கப்பட்டு வந்த தீர்க்கதரிசனக் கூற்று மெய்ப்படும் வேளை வந்துவிட்டதாகவே கோயங்காஜி நினைத்தார். அதோடு மட்டுமல்லாது, இந்தியாவிலிருந்து தம்மம் உலகெங்கும் பரவும் என்றும் நம்பப்பட்டு வந்தது. அந்த கூற்றையும் நிறைவேற்றும் பணி இன்னமும் இருந்தது.

அந்த பணியை ஏற்கும் முன்னர் கோயங்காஜி மற்ற நாடுகளுக்கு பயணம் செய்ய தகுதியுடையவராக ஆக வேண்டியிருந்தது. அவரது மியான்மார் பாஸ்போர்டில் அவர் இந்தியாவுக்குச் செல்ல மட்டுமே அனுமதி இருந்தது. அதில் மற்ற ஒப்புதல்களை பெற அவர் முயன்ற போதிலும் அது நடக்கவில்லை. எனவே, இந்திய பாஸ்போர்ட் பெறும் வகையில் தனது

குடியுரிமையை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளதை அவர் விருப்பமின்றி உணர்ந்தார். அது தனது சொந்த நாடாக அவர் இன்னமும் கருதிவந்த பர்மாவிடமிருந்து மேலும் ஒரு தொடர்பை அறுத்துக் கொள்வதாக இருந்தபோதிலும், ஒரு தம்ம தூதராக அவர் அதைச் செய்ய வேண்டியிருந்தது.

வியப்புக்குறிய வகையில், இந்திய குடிமகன் ஆதலும், புதிய பாஸ்போர்ட் பெறுதலும் அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. கோயங்காஜி என்ன பணி செய்கிறார் என்பதை உளவு பார்க்க மாறுவேடத்தில் முகவர்கள் தம்ம கிரிக்கு வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் தாமதங்கள் ஏற்பட்டன. எனினும், இறுதியில் அனைத்து இடையூறுகளும் களையப்பட்டு கோயங்காஜி அவர்களும் மாதாஜி அவர்களும் பாரிஸ் செல்ல விமானம் ஏறினார்கள். அவர் பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு வந்து ஏறக்குறைய பத்து ஆண்டுகள் முடிவடைந்திருந்தன.

அந்த ஆண்டு கோயங்காஜி அவர்கள் பிரான்சு நாட்டில் இரண்டு முகாம்களிலும், அதன் பின்னர் கனடாவில் ஒன்றிலும் இங்கிலாந்தில் இரண்டு முகாம்களிலும் பயிற்சியளித்தார். பழைய மாணவர்கள் பெருமளவில் முகாம்களில் பங்கேற்றனர். அதோடு முன் எப்பொழுதும் விபஸ்ஸனா பயின்றிராத பலரும் முகாமில் பங்கேற்றனர். அவர்களுள் சிலர் தொடர்ந்து வந்த குளிர்காலத்தில் தம்ம கிரிக்கு பயணம் செய்தனர். அடுத்த இருபது ஆண்டுகளுக்கு இதுவே வழக்கமாகி போனது. அந்த காலகட்டத்தில், கோயங்காஜி வருடாவருடம் இந்தியாவிற்கு வெளியே பயணித்தார். அவர் ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் மட்டுமன்றி ஜப்பான், தைவான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை, தாய்லாந்து முதலிய நாடுகளுக்கும் விஜயம் செய்தார். பின்னர், 1990ம் ஆண்டில், தமது சொந்த நாடான மியான்மார் நாட்டுக்கும் முதன்முறையாக திரும்பிச் சென்றார். கோயங்காஜி பயிற்றுவிக்கும் முறையில் விபஸ்ஸனா கற்கவும், தொடர்ந்து பயிற்சி செய்யவும் வாய்ப்புகள் அளிப்பதற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட மையங்கள் அவர் சென்ற இடங்கள் அனைத்திலும் வேறு பல இடங்களிலும் கூட தோற்றுவிக்கப்பட்டன.



**1979ல் பிரான்ஸ் நாட்டில் முதல் விபஸ்ஸனா முகாம்: குருஜி மற்றும் மாதாஜி**

*(அடுத்த இதழில் தொடரும் . . .)*

## புண்ணிய பலன்கள் பெற ஒரு அரிய வாய்ப்பு

தமிழகத்தின் இரண்டாவது விபஸ்ஸனா தியான மையமான ‘தம்ம மதுரா’வை நிறுவும் பணி மகிழ்ச்சிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆரம்பகட்டமாக 15 தியானிகள் தங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தியான முகாமும் தொடங்கப்பட்டுவிட்டது. இதற்கான நன்றி உடல், மனம் மற்றும் பொருள் அளவில் உவகை உள்ளத்துடன் உதவிய தியான சாதகர்களையே சாரும். முதற்கட்டமாக 40 தியான சாதகர்கள் தங்குவதற்கான இருப்பிடங்கள் கட்டும் பணி 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலையும் மும்முரமாக நடைபெற்று வருகிறது. தற்போது கைவசம் 40 லட்சம் ரூபாய் மட்டும் உள்ளதால் மீதம் 30 லட்சம் ரூபாய் தேவைபடுகிறது. நன்கொடை செலுத்த வேண்டிய வங்கி மற்றும் தொடர்பு விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| Bank | State Bank of India, Anaiyur Branch, Madurai, | Account number | 31262542660 |
| Account Name | VIPASSANA MEDITATION CENTRE, MADURAI, | SBI branch IFS Code | SBIN0012764 |
| SBI Swift code | SBININBB454, | | |
| Contact Mobile No. | 9443728116 / 9442603490 | Email ID | dhammamadhura@gmail.com |

RNI TC NO: TNTAM 17399/26.03.07, RDIS NO: 126/07,
REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA NO: TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/14-16

# விபஸ்ஸனா முகாம்கள் கால அட்டவணை

## தம்ம மதுரா

**விபஸ்ஸனா தியான மையம், செட்டியாபட்டி கிராமம், திண்டுக்கல், காந்திகிராம் பல்கலைக்கழகம் அருகில்**

2014 10-நாள் முகாம்கள்: **பிப்ரவரி: 5-16, மார்ச்: 5-16. ஏப்ரல்: 2-13. மே: 7-18. ஜூன்: 4-15. ஜூலை: 2-13. ஆகஸ்டு: 6-17. செப்டம்பர்: 3-14. அக்டோபர்: 1-12. நவம்பர்: 5-16. டிசம்பர்: 3-14.**

**3-நாள் முகாம்கள்:** மார்ச்: 1-4. ஏப்ரல்: 14-17. மே: 3-6. ஜூன்: 15-18. ஜூலை: 14-17. ஆகஸ்டு: 2-5. அக்டோபர்: 12-15. **சிறுவர் முகாம்கள்:** 16/2, 16/3, 13/4, 18/5, 13/7, 17/8, 14/9, 16/11.

பதிவு செய்ய: 1. திருமதி. ரேணுகா மேத்தா - 9443728116 / 9442603490, 2. திரு. மகேஷ் பன்சல் - 9843451153

இணையதளம் மூலம் பதிவு செய்ய: <http://courses.dhamma.org/en/schedules/schmadhura, மின் அஞ்சல்: dhammamadhura@gmail.com

## தம்ம சேது

**விபஸ்ஸனா தியான மையம், 533, பழந்தண்டலம் சாலை, திருநீர்மலை வழி, திருமுடிவாக்கம், சென்னை**

### 2014 கால அட்டவணை

**10-நாள் முகாம்கள்: பிப்ரவரி:** 19-2, **மார்ச்:** 5-16, 19-30. **ஏப்ரல்:** 9-20, 23-4. **மே:** 14-25. **ஜூன்:** 4-15. **ஜூலை:** 2-13, 16-27. **ஆகஸ்டு:** 30(ஜூலை)-10, 13-24. **செப்டம்பர்:** 3-14. **அக்டோபர்:** 22-2(நவம்பர்). **நவம்பர்:** 12-23, 26-7(டிசம்பர்). **டிசம்பர்:** 10-21, 24-4(ஜனவரி); **ஸதிபட்டான முகாம்கள்: ஜூன்:** 21-29. **செப்டம்பர்:** 18-26

**20-நாள் முகாம்:** 18 செப்டம்பர் முதல் 9 அக்டோபர் வரை, **30-நாள் முகாம்:** 18 செப்டம்பர் முதல் 19 அக்டோபர் வரை. **3-நாள் முகாம்கள்:** பிப்ரவரி: 13-16. ஏப்ரல்: 3-6. மே: 8-11, 29-1. ஜூன்: 18-21. ஆகஸ்டு: 28-31. நவம்பர்: 6-9. **1-நாள் முகாம்கள்:** 2/3, 6/4, 4/5, 14/5(புத்த பௌர்ணமி), 1/6, 6/6, 12/6(குரு பௌர்ணமி), 3/8, 7/9, 5/10, 2/11, 7/12. **சிறுவர் முகாம்கள்:** ஏப்ரல் 20. மே 11, 25. டிசம்பர் 28.

### தகவல் தொடர்பு எண்கள்

**தம்ம சேது:9444290953, 9444280952, 044-64504142, 044-65499965.**

**மின்-அஞ்சல்:** setu.dhamma@gmail.com

**வளைதளம் மூலம் பதிவு:**

http://courses.dhamma.org/en/schedules/schsetu

**சிறுவர் முகாம்கள்: +91-8148135795**

**கைபேசி எஸ்.எம்.எஸ்(sms)மூலம் செய்தி மடல் பதிவு செய்ய: 9841591734**

**தம்ம மதுரா: 9443728116, 9843451153**

### ஒரு நாள் தியான முகாம்கள்

1. இடம்: பாலானந்தா வித்யாலயா, 64 பர்கிட் சாலை, தி.நகர். நேரம்: ஞாயிறு காலை 9:00 முதல் 3:00 மணி வரை (தொலைபேசி: 9445391295)

2. இடம்: அகர்வால் வித்யாலயா, 54, ஈ.வி.கே ஸம்பத் சாலை, வேபேரி, தினத்தந்தி அலுவலகம் அருகில், சென்னை. நேரம்: ஞாயிறு காலை 9:00 முதல் 3:00 மணி வரை (தொலைபேசி: 9841591734)

2. கோவை: மாதத்தின் கடைசி ஞாயிறு. (தொலைபேசி: திரு. பரத் ஷா: 9842347244

### கூட்டுத்தியானம்

1. **கோவை:** ஞாயிறுதோறும் காலை 8 முதல் 9 வரை (தொலைபேசி: திரு மகேஷ்: 9843451153)

### மற்ற இடங்களில் 10-நாள் முகாம்கள்

**1. இடம்:** அரவிந்த் ஹெர்பல்ஸ், **இராஜபாளையம்; தேதி:** பிப்ரவரி 26 முதல் மார்ச் 9 வரை, 2014; பதிவு செய்துகொள்ள: 1. திருமதி அருணா: 9150131335

2. **இடம்:** நேரு வித்யாலயா, மலுமச்சம்பட்டி, **கோவை; தேதி: மே 21 முதல் ஜூன் 1 வரை,** 2014; பதிவு செய்துகொள்ள: 1. திரு. பரத் ஷா: 9842347244; 2. திரு. மகேஷ்: 9843451153

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER; Published on: 04/02/2014, Posted on: 13/2/2014
POSTED AT EGMORE ,
RMS/1 (PATRIKA CHANNEL)

*அனுப்புனர்:* Vipassana Meditation Centre, T2 Akshaya Flats, 55-Irusappa st, IceHouse, Chennai 5